TAMIL NADU LEGISLATURE LIBRARY
2 AUG 1973
MADRAS

தமிழ் நாடு சட்ட மன்றம்

வியாழக்கிழமை, 1973 ஏப்ரல் 5

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் [திரு. சி. பி. சிற்றரசு] அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடப்பட்ட வினாக்கள்

Farmers affected by the Flood in North Arcot District

* 346 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of farmers affected by the flood in North Arcot District during 1972;

(*b*) the assistance given by the Government to give relief to them; and

(*c*) the extent of agricultural lands affected by this flood ?

வெள்ளப் பெருக்கினால் வட ஆற்காடு மாவட்டத்தில் பாதிக்கப் பட்ட விவசாயிகள்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு (திரு. எல். பலராமன் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் வட ஆற்காடு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாய குடும்பங்கள் எத்தனை ?

(இ) இதற்கு அரசு வழங்கிய உதவிகள் யாவை ?

(உ) எவ்வளவு விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன ?

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 4,316 விவசாயக் குடும்பங்கள்.

(இ) பழுதடைந்த வீடுகளைத் திரும்பிக் கட்டுவதற்கும் உடைகளுக்குமாக ரூ. 2,29,880-ம் தக்காவிக் கடனாக ரூ. 16,250-ம் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு நிதி உதவியாக ரூ. 8,000-மும் வழங்கப்பட்டுள்ளது.

(உ) 1,821.83 ஏக்கர்.

Work done in the Kalaignar Karunanidhi in Tiruchirap-

* 345 Q.—S. S. THENNARASU (on behalf of THIRU KATTOOR GOPAL): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have received any representation to include the profession of "Barbers" in the list of professions to be examined by the Committee constituted by the Government recently to study the sixteen categories of professions and the workers engaged therein who are the under-dogs of the society; and

(*b*) if so, the action taken thereon by the Government?

முடிதிருத்துகிற தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள்

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. காட்டூர் கோபால் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்து வருகிற பதினாறு வகை தொழில்கள்—தொழிலாளர்கள் பற்றி ஆராய்ந்திடுவதற்கு, அண்மையில் அரசு அமைத்துள்ள குழுவின் பரிசீலனைக்குரிய தொழில்களின் பட்டியலில், "முடி திருத்துகிற தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களும்" சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.